# செயலாற்றுகை அறிக்கை

# 2016

இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


| | |
|---|---|
| அறிமுகம் | 01 |
| தூரநோக்கு | 02 |
| செயற்பணி | 02 |
| பணிகள் | 03 |
| உற்பத்திகள் | 03 |
| பதவியணி | 04 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 06 |
| சேவைகளை மேம்படுத்தல் | 07 |
| பயிற்சி மற்றும் இயலுமை மேம்பாடு | 08 |
| 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் | 11 |
| வருமானப் பகுப்பாய்வு | 18 |
| செலவீனப் பகுப்பாய்வு - 2016 | 18 |
| நிதிப் போக்குகள் | 20 |
| வருமானம் மற்றும் செலவீனப் பகுப்பாய்வு | 20 |
| கடந்த 5 வருட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வருமானம் | 21 |
| கடந்த 5 வருடங்களில் வருமானம் மற்றும் அனுமதிப்பத்திர பற்றிய தரவுகளின் பகுப்பாய்வு | 23 |
| இணைப்பு 01 – நிறுவன கட்டமைப்பு | 26 |

## ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

1969 ஆம் ஆண்டின் 1ம் இலக்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் 47 வருடங்களாக தமது செயற்பணியினை நாட்டுக்காக மேற்கொள்கிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு செய்யும் நோக்கினை முன்னிலைப்படுத்தி இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது அதற்குரிய கொள்கை உருவாக்குனர்களின் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இத்திணைக்களம் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் நலன்புரி, சுற்றாடல் மற்றும் பொது சகாதார பாதுகாப்பு ஆகியவற்றை பிரதான குறிக்கோள்களாக கொண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகளை தாயாரிப்பதுடன் அவற்றிற்கான வசதிகளை வழங்குதல் வரை வியாபித்திருக்கின்றது.

மேலும் சர்வதேச வர்தகத்தில் இலங்கை அடையாளத்தினை பாதுகாக்கும் விதத்தில் ஏற்றுமதி பொருட்கள் தொடர்பாக நியம முறையொன்றினை அறிமுகம் செய்தலும் இத் திணைக்களத்தின் பிரதான பணிகளில் உள்ளடங்குகின்றது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளினை அமுல்படுத்துவதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் புதிய முன்னெடுப்பொன்றாகும்.

இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட பேசல், ஸ்ரொக்கோம் மற்றும் றொட்டர்டாம் ஆகிய சர்வதேச சமவாயங்களினை பின்பற்றி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று சுற்றாடலுக்கும் பொது மக்களுக்கும் கேடு விளைவிக்கின்ற கிளைபோசெற் போன்ற இரசாயன பதார்தங்களின் இறக்குமதி கட்டுப்பாடு அல்லது தடைசெய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகள் தொடர்பாக இரண்டில் மூன்று பங்கு ஆயட்காலத்தினை கட்டாயமாக்குதல், காலாவதியான மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்வதனை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட முக்கியமான செயற்பாடாகும்.

இலங்கை சேது மார்கம் மற்றும் இந்து சமுத்திரத்தின் மிக விசேடத்துவமான இடத்தில் அமைந்துள்ளதுடன் சர்வதேச வர்தகத்தில் மிகவும் விசேடமாக மீள் ஏற்றுமதி மையாமாக இனங்காணப்பட்டுள்ளது. சீனா மற்றும் இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகின்ற புதிய பொருளாதார மேம்பாட்டு நிகழ்சித்திட்டங்களில் தேசிய ரீதியாக உயர் கொள்கை வேலைச் சட்டகமொன்று இருத்தல் மிக முக்கியமாகும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் சர்வதேச மாநாடுகள் மற்றும் ஒப்பந்தங்களின் தேவைகளுக்கேற்ப பலப்படுத்தப்பட்டுள்ளது.

## தூரநோக்கு

**சுபீட்சமான எதிர்காலத்தினை நோக்காக கொண்ட பொதுமக்களை பாதுகாத்தல்**

## செயற்பணி

**நாட்டின் பாதுகாப்பு, பொருளதாரம், பொதுச்சுகாதாரம், சுற்றாடல் பாதுகாப்பு ஆகிய விடயங்களை கவனத்தில் கொண்டு தொடர்ச்சியான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு தொடர்பில் அரசினால் காலத்துக்கு காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானங்கள் 1969 ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கேற்ப அமுல்படுத்தல்.**

## பணிகள்

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கித்தின் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு தேவையான ஒழுங்கு விதிளை அமுல்ப்படுத்தல்

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் ஊடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியினை கட்டுப்படுத்தல்

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பான விடயங்களின் போது சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

- ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தெரடர்பான செயற்பாட்டு ஆலேசனைகளை வணிக வங்கிகளுக்கு வெளியிடல்

## உற்பத்திகள்

- 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அனுமதி பத்திரங்கள் 15,498 அளவில் வழங்கியமையின் ஊடாக திணைக்களத்தின் செயற்பணியை நிறைவேற்றுவது தொடர்பாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டப்பாட்டினை மேற்கொள்ளல்.

- இறக்குமதி அனுமதிப் பத்திரத்திற்கு இணங்க பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொண்டதன் வரவு வைப்பதன் ஊடாக இறக்குமதி கட்டுப்பாடடினை ஒழுங்குபடுத்தல்.

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு கொள்கைகளின் படி அந்நிய செலாவணி வெளிச்செல்லாதிருப்பதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகள் தொடர்பாக அனுமதி வழங்குதல்.

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு இணங்காத சந்தர்பங்கள் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு தொடர்பில் வர்தக வங்கிகளுக்கு செயற்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்.

- அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தமையினால் கிடைத்த கட்டணமாக ரூபா 1370 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்து.

- புதிய கணனி நிகழச்சித் திட்டமொன்று அறிமுகம் செய்து கணனிக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தல். புதிய கணனிகள் மற்றும் பாகங்களை நிறுவுவதன் ஊடாக புதிய தகவல் கட்டமைப்புடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அனுமதிப் பத்திர விநியோகம் தொடர்பாக முறையான கணனி கட்டமைப்பொன்றை நிறுவுதல்.

## பதவியணி

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு அனமதிப் பத்திரம் விநியோகித்தல், வரவு வைத்தல் மற்றும் வருமானம் சேகரித்தல் தொடர்பான பணிகள் மற்றுமல்லாது பொதுவான அலுவலக பணிகள் கொள்கைகள் மற்றும் திட்டமிடல் பணிகள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அட்டவணை இலக்கம் 1)

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பணிகளை உயர் வினைத்திறனுள்ளதாக பேணிச்செல்வதற்கும் தொழில் தருணர்களுக்கு வினைத்திறனான மற்றும் சிகேகபூர்வமாக சேவை ஒன்றினை வழங்குவதற்கும் இந்த பதவியணி வருடம் பூராகவும் பொறுப்புடனும் கூட்டாகவும் செயற்படுகின்றது.

## 2016.12.31 ஆம் திகதியில் பதவியணி

அட்டவணை இல 01

| தொடர் இல | பதவி | சம்பள முறைமை | சேவை | அங்கிகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | 2016.12.31 ஆம் திகதியில் உள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் | SL3 2016 A | இலங்கை நிருவாக சேவை – விசேட தரம் | 1 | 1 | 0 |
| 2 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் | SL1 2016 A | இலங்கை நிருவாக சேவை- I | 1 | 1 | 0 |
| 3 | உதவி – பிரதிக் கட்டுப்பாளர் | SL1 2016 A | இலங்கை நிருவாக சேவை- II/III | 7 | 4 | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | கணக்காளர் | SL1<br>2016 A | இலங்கை கணக்காய்வாளர் சேவை - II/III | 1 | 1 | 0 |
| 5 | உள்ளக கணக்காய்வாளர் | SL1<br>2016 A | இலங்கை கணக்காய்வாளர் சேவை - II/III | 1 | அலுவலக பணி பிறிதொரு வரால் நிறைவேற் றப்படும். | 1 |
| 6 | நிறுவாக அலுவலர் | MN7<br>2016 A | அரச முகாமைத்துவ உதவியாளர் சேுவை – உயர் தரம் | 1 | 1 | 0 |
| 7 | மொழிபெயர்பாளர் | MN6<br>2016 A | மொழிபெயர்பாளர் | 2 | - | 2 |
| 8 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | MN6<br>2016 A | இலங்கை தகவல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை | 1 | 2 | 0 |
| 9 | புலனாய்வு உதவியாளர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 2 | 2 | 0 |
| 10 | அராய்ச்சி உதவியாளர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 1 | 1 | 0 |
| 11 | கொள்கை மற்றும் திட்டமிடல் உதவியாளர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 1 | 1 | 0 |
| 12 | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 1 | 1 | 0 |
| 13 | தரவு முகாமைத்துவ உதவியாளர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 1 | 1 | 0 |
| 14 | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | MN4<br>2016 A | திணைக்கள அலுவலர் | 1 | - | 1 |
| 15 | அபிவிருத்தி உதவியாளர் | MN4<br>2016 A | அபிவிருத்தி அலுவலர் சேவை I/II/III | 4 | 2 | 2 |
| 16 | அரச முகாமைத்துவ உதவியாளர் | MN2 | அரச முகாமைத்துவ | 57 | 48 | 9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2016 A | உதவியாளர் சேவை - I/II/III | | | |
| 17 | சாரதிகள் | PL3 2016 A | சாரதிகள் சேவை | 5 | 5 | 0 |
| 18 | அலுவலக உதவியாளர் | PL1 2016 A | அலுவலக உதவியாளர் சேவை- I/II/III | 15 | 7 | 8 |
| **மொத்தம்** | | | | **103** | **78** | **26** |

## 2016.12.31 ஆம் திகதியில் பதவியணி

அட்டவணை இல 02

| தொடர் இல | பதவிப்பெயர், சேவை மற்றும் வகுப்பு | அங்கிகரிக் கப்பட்ட பதவியணி | உண்மையான ஊழியர் எண்ணிக்கை | வித்தியாசம் மிகை வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | பதவியணிச் சேவை | 12 | 08 | 04 |
| 02 | பதவியணியல்லாச் சேவை | 71 | 57 | 14 |
| 03 | கனிஷ்ட தரம் | 20 | 12 | 08 |
| **மொத்தம்** | | **103** | **77** | **26** |

## தகவல் தெழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தை கருதும் போது விண்ணப்பதாரி ஒருவர் அனுமதிப் பத்திரம் ஒனறைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு நாட்கள் எடுத்தன. எனினும் 2014 ஆம் ஆண்டில் மென்பொருள் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டதனூடாக திணைக்களத்தின் பணிகள் புதியதொரு மார்கத்திற்கு பிரவேசித்தது. உரிய ஆவணங்களை சரியாக வழங்குகின்ற விண்ணப்பதாரி ஒருவருக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் ஒன்று இரண்டு மணித்தியாலங்களிலும் குறைந்த காலத்தில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் இந்த கணனி செயற்பாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான ஆரம்ப தரவுகளினை தயார்

செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய மென்பொருள் கட்டமைப்பின் மூலம் பிரதானமாக மூன்று இலக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- அனுமதிப் பத்திரம் ஒன்றினை விநியோகிப்பதற்கு எடுக்கும் காலத்தினை குறைத்தல்
- ஆவணங்கள் மற்றும் சிபாரிசுகளின் நம்பகத் தன்மையினை பாதுகாத்தல்
- வினைத்திறனினை மேம்படுத்தல்

இரண்டாவது கட்டமாக மென்பொருள் கட்டமைப்பினை வெளியக நிறுவனங்களுடன் தொடர்பு படுத்துவதற்கு எதிர்பார்கப்படுகின்றது. விசேடமாக அனுமதிப் பத்திர கட்டுப்பாடு மற்றும் விநியோகித்தல் தொடர்பான செயற்பாட்டில் அதனுடன் இணைந்துள்ள வெளியக நிறுவனங்கள் பாரியளவில் தொடர்புபடுவதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்நிறுவனங்களுடன் நேரடித் தொடர்புகளை பேணிச் செல்வதன் ஊடாக மிகவும் பரந்த மற்றும் வினைத்திறனடனான சேவையொன்றினை வழங்குவதற்கு எதிர்பார்கப்படுகின்றது.

**உதாரணமாக:**

1. இலங்கைச் சுங்கம்
2. மோட்டார் போக்குவரத்து திணைக்களம்
3. களைநாசினிகள் பதிவாளர் அலுவலகம்
4. தேசிய ஔடத கட்டுப்பாட்டு அலகு
5. தேசிய ஔடத ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை
6. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

திணைக்களத்தின் கணனிக் கட்டமைப்பு இத்திணைக்களத்துடன் நேரடியாக தொடர்பு படுத்துவதன் ஊடாக வினைத்திறனான சேவையொன்று மற்றுமல்லாது முறைகேடுகள் அற்ற சுற்றாடல் ஒன்றினை உருவாக்கிக்கொள்வதற்கான சந்தர்பம் ஒன்று கிடைக்குமென இனங்காணப்பட்டுள்ளது.

## சேவையினை மேம்படுத்தல்

திணைக்களத்தின் சேவைகளினை உயர் தரத்திற்கு கொண்டு வருவதற்காக திணைக்களத்தின் கட்டமைப்பில் மாற்றங்களை மேற்கொள்ளல், மிகவும் வினைத்திறனான கணனிக் கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்தல், பதவியணியின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மெருகூட்டுவதற்காக பயிற்சி நெறிகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வரவு வைத்தல் போன்ற தகவல்களை உடனுக்குடன் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும் வரவு வைத்தல் பற்றிய வரவுத் தரவுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் அச் செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்கும் இந்தக் கணனிக் கட்டமைப்பு இலங்கைச் சுங்கத் திணைக்களத்துடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கணனிக் கட்டமைப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக அனுமதி மற்றும் சிபாரிசுகளை வழங்குகின்ற நிறுவனங்களுடன் நேரடி இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் இந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாட்டுடன் தொடர்புபடுவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு இலகுவானதும் துரிதமானதுமான சேவையொன்றினை வழங்குதற்கு இயலுகின்றமை.

அதேபோன்று சேவைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நேரடி மற்றும் மறைமுகமான செயற்பாடுகளினூடாக வர்த்தக சமூகம் மற்றுமன்றி பொதுமக்களுக்கும் சமமானதும் பக்கச்சார்பற்றதுமான சேவைகளினை வழங்குவதற்கு இயலும் வகையில் இலக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது திணைக்களத்துக்கும் அவ்வாறு சரியான, வினைத்திறனான மற்றும் விளைத்திறனான சேவை ஒன்றினை வழங்குவதற்கும் இயலுமை கிமைக்கப் பெற்றுள்ளது.

## பயிற்சியளித்தல் மற்றும் இயலுமை மேம்பாடு

திணைக்கள அலுவலர்களின் அறிவினை மேம்படுத்தி சேவைகளை உயர் வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் கீழ்வருமாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக அலுவலர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

1. **உள்நாட்டுப் பயிற்சிகள் - அபிவிருத்தி உதவியாளர்கள், அ.மு.சே / அ.உ.சே**

அட்டவணை இல 03

| தொடர் இல | நிறுவனம் | பயிற்சி பாடநெறியின் பெயர் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | சிஜடிஏ | சாரதிகளுக்கான விஞ்ஞான ரீதியான மற்றும் பாதுகாப்பான வாகன செலுத்தல். | 01 | 2016.03.01 | ரூ. 3,000.00 |
| 02. | நிபுனதா பியச | தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பொருட்கள் கொள்வனவு ஏற்பாடு | 02 | 2016.03.14/15 | ரூ.17,000.00 |
| 03. | மின்வலு மற்றும் வலுச்சக்தி அமைச்சு | வலுச்சக்திப் பாதுகாப்பு மற்றும் கணிப்பீடு | 02 | 2016.04.05 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04. | அபிராக் நிறுவனம் | உத்தியோகபூர்வ வங்கிகள் மற்றும் காசோலைகள் | 02 | 2016.04.07 | ரூ.12,000.00 |
| 05. | சிலிடா | Advanced EXCEL | 01 | 2016.05.12/17 | ரூ.16000.00 |
| 06. | நிபுனதா பியச | அலுவலக உபகரணங்கள் பற்றிய கட்டுப்பாடுகள் | 02 | 2016.05.26/27 | ரூ.17,000.00 |
| 07. | தேசிய நூலக மற்றும் விஞ்ஞான நிறுவனம் | நூல்நிலைய மென்பொருள் பயன்பாடுகள் | 02 | 2016.06.15 | ரூ.10,000.00 |
| 08. | நிபுனதா பியச | தனிப்பட்ட கோவைகள் பராமரிப்பு | 02 | 2016.06.20/21 | ரூ.17,00.00 |
| 09. | பிராக் நிறுவனம் | அரச கடிதங்களை எழுதுதல் மற்றும் கோவைப்படுத்தலும் | 01 | 2016.07.12 | ரூ. 6000.00 |
| 10 | நிபுனதா பியச | தடைதாண்டல் பரீட்சையை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 03 | 2016.08.05./06 | ரூ.24,000.00 |
| 11. | மூலதன நிறுவனம் | சம்பள முகாமைத்துவம் மற்றும் மாற்றம் | 01 | 2016.10.11 | ரூ. 6000.00 |
| 12. | அணுச் சக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு | ‘‘அணு மற்றும் கதிரியக்க அவசரநிலை ஆயத்தம் மற்றும் பதில் நடவடிக்கை’’ தொடர்பான தேசிய பயிற்சிப் பாடநெறி | 02 | 2016.12.07/08/09 | - |
| 13. | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | பொலிக்லோரினேட் பைபினைல்ஸ் இரசாயனப் பயன்பாடு பற்றி அறிவுறுத்தும் செயலமர்வு | 03 | 2016.12.19 | - |
| 14. | ஐக்கிய நாடுகளின் தூதரகம் | சர்வதேச இரட்டைப் பயன்பாட்டு புலனாய்வு நிகழ்ச்சித்திட்டம் | 02 | 2016.12.12 - 16 | - |
| 15. | எஸ்டிஎப்எஎல் | அலுவலக உதவியாளரின் பணியும் பொறுப்புக்களும் பற்றிய செயலமர்வு | 01 | 2016.12.19/20 | - |

## 2. உள்நாட்டுப் பயிற்சிகள் - பதவிநிலை அலுவலர்கள்

அட்டவணை இல 04

| தொடர் இல | நிறுவனம் | பயிற்சி பாடநெறியின் பெயர் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 01. | சினமன் லேக் சைட் ஹோடேல் | ”பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் தர உட்கட்டமைப்பு அபிவிருத்தி’’ பற்றிய சிலிடா சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி திட்ட பின்னூட்டல் கருத்தரங்கு | 01 | 2016.01.23 - 30 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02. | கொம்போட் இன்டர் நசனல் | முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்றுனர்களுக்கான பிணக்கு முகாமை மற்றும் பேச்சு வார்த்தைகள் | 02 | 2016.02.20 | ரூ. 13,000.00 |
| 03. | பிரக் நிறுவனம் | தகவல் முறைமைக் கணக்காய்வு | 01 | 2016.07.24 | ரூ. 6,000.00 |
| 04. | மிலோதா நிறுவனம் | பொது கொள்வனவு ஏற்பாட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் | 01 | 2106.08.26 | ரூ. 6,750.00 |
| 05. | பிராக் நிறுவனம் | வரி முகாமைத்துவம் மற்றும் திருத்தம் | 01 | 2016.10.11 | ரூ. 6000.00 |
| 06. | எஸ்டிஎப்எல் | களஞ்சிய முகாமை மற்றும் கொள்வனவு முறைமைகள் | 01 | 2016.11.24/25 | ரூ. 8,500.00 |
| 07. | எஸ்டிஎப்எல் | 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவு மற்றும் வரி முறைமை பற்றிய செயலமர்வு | 02 | 2016.12.22 | ரூ. 10,000.00 |
| 08. | ஐக்கிய அமேரிக்க தூதரகம் | சர்வதேச இரட்டை பயன்பாட்டு புலனாய்வு நிகழ்ச்சித்திட்டம் | 01 | 2016.12.12 - 16 | - |

**3. வெளிநாட்டுப் பயிற்சிகள் - அபிவிருத்தி அலுவலர்** அட்டவணை இல 05

| தொடர் இல | நிறுவனம் | பயிற்சி பாடநெறியின் பெயர் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | சீனா | தென் ஆசிய நாடுகளிலிருந்தான அரச தூதுவர்களுக்கான கருத்தரங்கு | 01 | 2016.11.02 – 2016.11.24 |

**4. வெளிநாட்டுப் பயிற்சிகள் - பதவிநிலை அலுவலர்கள்**

அட்டவணை இல 06

| தொடர் இல | நிறுவனம் | பயிற்சி பாடநெறியின் பெயர் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை |
|---|---|---|---|---|
| 01 | சீனா | அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கான இறக்குமதி ஏற்றுமதி உணவுப் பொருட்களின் தரப் பரிசோதனை பற்றிய கருத்தரங்கு | 01 | 2016.03.30 – 2016.04.23 |
| 02. | அமேரிக்க ஐக்கிய நாடுகள் | ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய வதிவிலுள்ளவர்களின் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 01 | 2016.05.08- 2016.05.15 |
| 03. | செக் குடியரசு | 15 ஆவது சர்வதேச ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு மாநாடு | 01 | 2016.11.02 – 2016.11.04 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | பெங்கொக் | ஆசிய போதைவஸ்து சட்ட வலுப்படுத்தல் அலுவலர்களுக்கான ஆபத்தான இரசாயனங்கள் | 01 | 2016.11.21<br>2016.11.28 |

## 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றிய அரசின் கொள்கைகளைச் செயன்முறைப்படுத்தி புதிய ஒழுங்கு விதிகளை வெளியீடு செய்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.

அட்டவணை இல 07

| **அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை வெளிடப்பட்ட திகதி** | **அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இல.** | **உள்ளடக்கம்** |
|---|---|---|
| 11.02.2016 | 1953/27 | நீர்குளாய் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்தல் பற்றிய ஒழுங்கு விதிகள் |
| 11.02.2016 | 1953/28 | ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு திருத்தம் பற்றிய ஒழுங்கு விதிகள் |
| 07.06.2016 | 1970/9 | இறக்குமதி செய்யப்படுகின்ற பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் ஆயுட்காலம் மற்றும் பாதுகாப்பு கவச இறக்குமதி பற்றிய ஒழுங்கு விதிகள் |
| 11.11.2016 | 1992/74 | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதியை அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தல் பற்றிய ஒழுங்கு விதிகள் |
| 30.12.2016 | 1999/47 | மோட்டார் வாகன இறக்குமதியுடன் தொடர்புடைய சுங்க குறியீட்டுத் திருத்தம் மற்றும் சேயற்கை உராய்வு நீக்கி இறக்குமதி அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டினை உட்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகள் |
| | | செயற்கை உராய்வு நீக்கி இறக்குமதி ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தல். |

**1. அதி விசேட வர்தமானிப் பத்திர இல. 1953/27 மற்றும் 11.02.2016**

**நீரக்குளாய் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்தல் பற்றிய ஒழுங்கு விதிகள்**

- இலங்கை அரசு 2025 ஆம் ஆண்டில் முழு நாட்டிற்கும் தூய்மையான குடிநீரினை வழங்குவதற்கும் 2020 ஆம் ஆண்டில் மொத்தச் சனத்தெரகையில் 60 சத வீதத்தினருக்கு குழாய் நீர் வழங்குவதற்கும் முன்னுரிமை வழங்கி திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

- தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபை இலங்கையில் குடி நீரினை விநியோகிக்கும் அதிகாரம் பெற்ற நிறுவனமாக இருப்பதுடன் தற்பொழுது 1.5 மில்லியன் குடும்பங்களுக்கு குடி நீரினை வழங்குகின்றது. 2020 ஆம் ஆண்டளவில் இந்த அளவினை 60 சதவீதம் வரைக்கும் விஸ்தரிப்புச் செய்வதற்கும் எதிர்பார்கப்படுகின்றது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தரவுகளுக்கு ஏற்ப ஒரு கனமீற்றர் நீரினை உற்பத்தி செய்வதற்கு 160 ரூபா அளவில் செலவு ஏற்படுகின்றது.
- எனினும் தூய்மையாக்கப்பட்ட நீரினை விநியோகிக்கும் போது மற்றும் வீட்டு மட்டத்தில் நீர் வழங்கல் கட்டமைப்புகளில் நீர் கசிவடைவதன் காரணமாக பாரியளவான நீர் வீணடிக்கப்படுகின்றமை உண்மையாகும். இதற்கான பிரதான காரணமாக இருப்பது தரம் குறைந்த நீர்க் குழாய் உதிரிப்பாகங்களின் பயன்பாடு மற்றும் தரமற்ற குழாய் நீர் தொழில்நுட்ப செயற்பாடுகளும் ஆகும். தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கணக்கெடுப்பிற்கு ஏற்ப நீர் கசிவடைதன் காரணமாக ஏற்படும் நீர் விரையத்தின் அளவு நாள் ஒன்றிற்கு 250,000 கனமீற்றர்கள் ஆகும்.
- இதன்பிரகாரம் கருதும்போது நீர் விரையத்தினை இழிவுபடுத்தி சேமிப்பாகின்ற பாரியளவு நிதியினை குழாய் நீர் விநியோகச் செயற்பாடுகளை விஸ்தரிப்பு செய்வதற்காக பயன்படுத்தமுடியும்.
- இந்த இலக்கினை அடைந்து கொள்ளும் நோக்கில் தரத்தில் கூடிய குழாய் நீர்த் தொகுதிகளை பயன்படுத்த வேண்டியதுடன் அது தொடர்பாக உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் உற்பத்தி செய்யப்படுகின்ற குழாய் நீர்த் தொகுதிகளை மற்றும் உதிரிப்பாகங்களை சந்தைக்கு அறிமுகம் செய்வதற்கு முன்னர் தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல் அத்தியவசியமாகும்.
- மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு குழாய்த் தொகுதி உதிரிப்பாகங்கள் சிலவற்றின் உயர் தரம், மற்றும் தரக் கட்டுப்பாடு மற்றும் உற்பத்தி விபரங்களை வெளியீடு செய்தல் தொடர்பாக 2016.02.11 ஆம் திகதிய 1953-27 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

- அதன் பிரகாரம் 2016.02.11 ஆம் திகதி வெளிடப்பட்ட 1953-27 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி பத்திரிகை 2016 மார்ச் எட்டாம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்பட்டதுடன் 2016 ஜுலை 22 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கிகரிகப்பட்டது.

**2. 1953-28 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி பத்திரிகை மற்றும் 2016.02.11**

**ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு அனமதிப் பத்திர கட்டண திருத்தம் பற்றிய ஒழுங்கு விதிகள்**

- 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க ஏற்றமதி மற்றும் இற்க்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்றமதி மற்றும் இற்க்குமதி அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பாக அனுமதிப்பத்திர கட்டணங்களை தீர்மானித்தல் வேண்டும். அதன்பிரகாரம் 2017.10 08 ஆம் திகதிய 1518-4 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி பத்திரிகைக்கு ஏற்ப அனுமதிக் கட்டணங்கள் அறவிடப்பட்டன.
- அதன் பின்னர் 2015.06.18 ஆம் திகதிய 1919-49 இலக்க சட்டத்திற்கு அமைவாக அது திருத்தம் செய்யப்பட்டது.
- பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக அவ் வரத்தமானி பத்திரிகை உரிய காலத்தில் பாரளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு இயலாதுபோனது.
- இதன் காரணமாக 2016.02.11 ஆம் திகதிய 1953-28 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி பத்திரிகை ஊடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு கட்டணங்கள் மற்றும் மேலதிக கட்டணங்கள் மீண்டும் பிரகடணப்படுத்தப்பட்டதுடன் 2016 மார்ச் ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தின் அங்கிகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2016 ஜுலை 22 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அங்கிகாரம் பெறப்பட்டது.

**3. அதிவிசேட வர்தமானிப் பத்திரிகை 1970-09 மற்றும் 2016-06.07**

**இறக்குமதி செய்யப்படுகின்ற பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் ஆயுட்காலம் மற்றும் பாதுகாப்பு தலைக்கவச இறக்குமதி பற்றிய ஒழுங்கு விதிகள்**

- 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கேற்ப மோட்டார் சைக்கிள் ஒட்டுனர்களின் மற்றும் போட்டிகள் தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற மோட்டார் வாகனங்களை செலுத்துகின்றவர்களின் பாதுகாப்பினை கவனத்திற் கொண்டு தலைக் கவச இறக்குமதி அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது. மேலும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக வசதிகளை வழங்கும் நோக்கில் விசேட

பணிகளிற்கான வாகனத்தொகுதிகளில் நீண்ட லொறிகள் மற்றும் சீமெந்து கலவை செய்யும் லொறிகள் இறக்குமதி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட வயதெல்லை 7 இருந்து 10 வரை உயர்தப்பட்டது.

- வருமான நிருவாக கட்டளை தொடர்பான திருத்தங்களுக்கு ஏற்ப உத்தேசிக்கப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கம் 80.12 இன் கீழ் கொண்டு வரப்படுவதுடன் பொதுமக்கள் போக்குவரத்து தொடர்பான மோட்டார் வாகனங்கள், இறக்குமதி தொடர்பான அனுமதிக்கப்பட்ட வயதெல்லை ஆரம்ப பதிவிலிருந்து 5 வருடம் தொடக்கம் 10 வருடம் வரையும், வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கம் 87.03 இன் கீழ்வருகின்ற வாகனங்களின் வயதெல்லை ஆரம்ப பதிவிலிருந்து 2 வருடங்கள் முதல் 3 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை திருத்தம் செய்து 87.02 இன் கீழ் வருகின்ற வாகனங்கள் 10 வருடங்களை விஞ்சுகின்ற சந்தர்பத்திலும் 87.03 இன் கீழ் வருகின்ற வாகனங்கள் 03 வருடங்களை தாண்டுகின்ற சந்தர்பத்திலும் இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் கட்டுப்படுத்தப்பட்டு 1903-41 ஆம் இலக்க 2015.02.26 ஆம் திகதிய அதிவிசேட வர்தமானி பத்திரிகை வெளியீடு செய்யப்பட்டது. எனினும், அது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒரு மாதத்தினுள் பாராளுமன்றத்தினள் சமர்ப்பிப்பதற்கு இயலாதுபோனது.

- அதன் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை அமுலப்படுத்தி 2016.06.07 ஆம் திகதிய 1970-09 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானிப் பத்திரிகை பாராளுமன்றத்தில் 2016 ஜுலை 1 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2016 ஜுலை 22 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

**4. அதிவிசேட வர்தமானிப் பத்திரிகை 1992-74 மற்றும் 2016.11.11**

**தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் மக்கரல் மீன் இற்க்குமதி பற்றிய ஒழுங்கு விதிகள்**

- 20,000 மெற்றிக் தொன் வருடாந்த தகரித்தில் அடைக்கப்பட்ட மீன் தேவையினை நிறைவு செய்துகொள்வதற்காக வருடாந்தம் 5 பில்லியன் ரூபா அளவில் வெளிநாட்டுச் செலாவணி விரையம் செய்யப்படுகின்றது. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டில் உள்நாட்டு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் தொடர்பாக விசேட இறக்குமதி வரி விதிக்கப்ப்டது.
- 2015 ஆம் ஆண்டு வாடிக்கயாளருக்கு நிவாரணமாக தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் தொடர்பாக உச்ச சில்லறை விலை தீர்மானிக்கப்பட்டதுடன் இறக்குமதி பொருட்கள்

தொடர்பாக விசேட இறக்குமதி வரியைக் குறைப்பது தொடர்பாக அரசினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

- தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதியினை முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும்போது 2015 ஆம் ஆண்டில் 49,016 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளதுடன் இது முன்னைய வருடத்தை போன்று இருமடங்காகும். இதன் காரணமாக 11.9 பில்லியன் ரூபாக்கள் வெளிநாட்டுச் செலாவணி உள்நாட்டிலிருந்து வெளிச் செலுத்தப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படுகின்ற தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களுக்கு உச்ச சில்லறை விலை தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து உள்நாட்டின் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களின் உற்பத்தி கிரயம் உயர் பெறுமானத்தில் காணப்படுவதினால் உள்நாட்டு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உற்பத்தியாளர்கள் நட்டத்தினை பெற்றதுடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மீன் தகரத்தில் அடைத்தல் கைத்தொழில்கள் மூடப்படும் நிலைமைக்கும் ஆளாகின. இதன் காரணமாக உள்நாட்டு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கைத்தொழில் ஈடுபட்டுள்ளவர்கள் மெக்கரல் மீன்களை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகை வழங்கப்பட்டது.
- அதன் பிரகாரம் 2016.01.12 ஆம் திகதிய 16/0093/725/003 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக சுங்க குறியீட்டிலக்கம் 03.03.54 இல் வகைப்படுத்தப்பட்ட மெக்கரல் மீன் தொடர்பாக இறக்குமதி தீர்வைச் சலுகை வழங்கப்பட்டது.
- எனினும், உள்நாட்டுத் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலாளர்கள் மற்றுமல்லாது பிற இறக்குமதியாளர்களும் மெக்கரல் மீன் தொடர்பாக வழங்கிய சலுகையின் கீழ் மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- அதன் பிரகாரம் உள்நாட்டு மீன்பிடிக் கைத்தொழிலினை பாதுகாத்துக் கொள்வதற்காக உள்நாட்டுத் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் மாத்திரம் மெக்கரல் மீன் இறக்குமதி தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகையினை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் 1992-74 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி அறிவித்தலின் மூலம் மெக்கரல் மீன் இறக்குமதி மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதி அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஊடாக
    - உள்நாட்டு மீன்பிடிக் கைத்தொழிலைப் பாதுகாத்தல்
    - உள்நாட்டு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலைப் பாதுகாத்தல்
    - உள்நாட்டுச் சந்தைக்கு தரக் குறைவான தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல்

- ○ தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மீனின் அளவினைக் கட்டுப்படுத்தல்

ஆகிய விடையங்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்கப்படுகின்றது.

- மேற்படி திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு 1992-74 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானிப் பத்திரிகை 2016.11.11 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் அங்கிகாரத்திற்காக 2016.12.06 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2017.01.25 ஆம் திகதி அங்கிகாரம் பெறப்பட்டது.

**5. அதிவிசேட வர்தமானிப் பத்திரிகை 1999-47 மற்றும் 2016.12.30**

**மோட்டார் போக்குவரத்து இறக்குமதியுடன் தொடரபுடய சுங்க குறியீட்டிடல் திருத்தம், செயர்க்கை மற்றும் உராய்வு நீக்கியை இறக்குமதி அனுமதிப் பத்திர கட்டுப்படுத்தல் பற்றிய ஒழுங்கு விதிகள்**

**மோட்டார் வாகனங்கள் வாகன வரி**

- 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு ஏற்ப புதிய வரி விதிப்பு முறைமை ஒன்றினை அறிமுகம் செய்ததனைத் தொடர்ந்து இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்க விதிகள் பிரதானமாக இரண்டு வகையாக திருத்தம் செய்யப்பட்டன.

- புதிய வரி விதிப்பு முறைமையினைத் தொடர்ந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளினை இலகுபடுத்துவதற்காக வாகனங்கள் மற்றும் வாகனப் பகுதிகளின் இறக்குமதி தொடர்பான 16 புதிய வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

- இந்தப் புதிய வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கங்கள், இரு நோக்கு வகையைச் சேர்ந்த வாகனங்களின் எஞ்சின் இயலளவுக்கு ஏற்ப மின் சக்தியினால் செயற்படுகின்ற வாகனங்களில் மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்கின்ற விதம், அதாவது சூரிய சக்தி அல்லது வேறு மின் விநியோக முறைமைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனக் கூட்டில் பொருத்தப்பட்டுள்ள உதிரிப்பாகங்களுக்கு ஏற்ப வாகனக் கூடு தொடர்பாக வேறான வகைப்படுத்தல் குறியீட்டு இலக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

- பவுசர், குளிரூட்டி ரக் வாகனம், கன்டர் மற்றும் வேறு வகையான பொருட்களை ஏற்றிச் செல்கின்ற வாகனங்களின் ஆயுட்காலம் 10 வருடங்கள் வரை நீடிப்புச் செய்யப்பட்டது.

**செயற்கை உராய்வு நீக்கி**

- திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் சகல உராய்வு நீக்கி எண்ணெய்கள் மற்றும் உராய்வு நீக்கி (இயற்கை மற்றும் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட) இறக்குமதி, ஏற்றுமதி விற்பனை, விநியோகம் அல்லது இலங்கையினுள் பகிர்ந்தளிப்பதற்கு அதிகாரம் பெற்ற பகுதியினர்களிடம் மாத்திரம் கையளிப்பதன் ஊடாக நிருவகிக்கப்பட்டது.
- இலங்கை மசகு எண்ணெய் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட 2016.07.12 ஆம் திகதிய 1453-6 ஆம் இலக்க வர்தமானி அறிவித்தலின் மூலம் உராய்வு நீக்கி இறக்குமதி, ஏற்றுமதி விற்பனை, விநியோகம் அல்லது இலங்கையினுள் பகிர்ந்தளிப்பதற்கு 13 பகுதியினர்கள் தெரிவு செய்யப்பட்டு பொறுப்பளிக்கப்பட்டது.
- செயற்கையான உராய்வு நீக்கி இறக்குமதிக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை. எனினும், செயற்கையான உராய்வு நீக்கி 34.03 இயைபுமுறை வகைக்குறியீட்டிலக்கத்தில் இருந்து வேறுப்படினும், கனிமம் மற்றும் செயற்கையான உராய்வு நீக்கி என்பன கனிம உற்பத்திகளாகும். அவற்றின் பொறிமுறையில் மாத்திரமே வேறுப்படுகிறன.
- செயற்கையான உராய்வு நீக்கி சுற்றாடலுக்கு தீங்கற்ற உற்பத்தியாக இருப்பதுடன் அதன் காரணமாக இறக்குமதி வரிச் சதவீதம் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது. கனிம எண்ணையை ஆதாரமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற உராய்வு நீக்கிகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வோர் குறைந்த தீர்வை வரி பெற்றுக் கொள்வதற்காக அவை செயற்கையான உராய்வு நீக்கியென குறிப்பிட்டு சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவித்துக்கொள்கின்றனர்.
- உராய்வு நீக்கி இறக்குமதிக்கு செய்ய அனுமதியற்ற பகுதியினர்களுக்கும் கனிம எண்ணையை செயற்கையான உராய்வு நீக்கி என குறிப்பிட்டு நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு முற்பட்டுள்ளனர்.
- அதன் காரணமாக மசகு எண்ணையுடன் இணைந்த உராய்வு நீக்கி இறக்குமதியின் ஊடாக அராசங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிய தரமில்லாத உராய்வு நீக்கிகள் பாரிய அளவில் வர்த்தகச் சந்தைக்கு வருகின்றமையும் நிகழ்கின்றது. அதன் காரணமாக, செயற்கையான உராய்வு நீக்கி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திர கட்டுப்பாட்டுக்குள் உற்படுத்தி இது போன்ற முறைகேடுகளை சீர் செய்து அரச வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.
- அதன் பிரகாரம், மேற்படி தீர்மானத்தை அமுல்படுத்துவதற்காக 1999-47 ஆம் இலக்க 2016.12.30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதுடன்

2016.12.31 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு 2017.01.26 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெறப்பட்டது.

## வருமானப் பகுப்பாய்வு – 2016

2016 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 1,100 மில்லியன் ரூபாவாக இருப்பதுடன் திணைக்களம் 2016 ஆம் வருடத்தின் போது 1,370 மில்லியன் ரூபாக்கள் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு இயலுமை பெற்றுள்ளது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது வருமானம் 25.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது கீழ் உள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர வருமானம் - ரூ. 1,370,847,281.23

இந்த அனுமதிப்பத்திர வருமானத்தில் மேலதிக கட்டணம் மற்றும் திருத்தக் கட்டணமும் உள்ளடங்குகின்றது.

1. **வருமானம் - 2016**

அட்டவணை இல 08

| விபரம் | 2015 உண்மை வருமானம் ரூ. | 2016 அங்கிகரித்த மதிப்பீடு ரூ. | 2016 மீள் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. | 2016 உண்மை வருமானம் ரூ. |
|---|---|---|---|---|
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,089,153,993 | 1,100,000,000 | - | 1,370,847,281 |

## செலவீனப் பகுப்பாய்வு – 2016

1. **மீண்டெழும் செலவீனம் மற்றும் மூலதனச் செலவீனம்**

2016 ஆம் ஆண்டுக்கான 65.875 மில்லியன் ரூபா மீண்டெழும் மற்றும் மூலதன செலவீனம் தொடர்பாக நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளது. செலவீனம் 59.66 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. அது மொத்த நிதியேற்பாட்டின் 91 சதவீதம் ஆகும்.

தலைப்பு இல : 296

அமைச்சு : அபிவிருத்தி உபாய வழிகள் மற்றும் சர்வதேச வர்த்தக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

நிகழ்ச்சித்திட்ட இல : 01

செயற்திட்டம் : 01

அட்டவணை இல 09

| விபரம் | 2015 உண்மைச் செலவீனம் ரூபா | 2016 அங்கிகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. | 2016 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. | 2016 உண்மைச் செலவீனம் ரூ. | நிதியேற்பாட்டு பயன்பாடு % |
|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவீனம்** | | | | | |
| தனியாள் சம்பளங்கள் | 39,284,605 | 41,950,000 | 41,950,000 | 40,025,561 | 95% |
| வேறு மீண்டெழும் செலவீனம் | 15,106,544 | 18,075,000 | 17,881,000 | 16,294,599 | 91% |
| மீண்டெழும் செலவீன மொத்தம் | **54,391,149** | **60,025,000** | **59,831,000** | **56,320,161** | **94%** |
| **மூலதனம்** | | | | | |
| 2001 – கட்டட நிர்மாணம் | - | - | - | - | - |
| 2003 – வாகனங்கள் | 16,216 | 250,000 | 351,000 | 338,756 | 96% |
| 2102 – தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 2,331,252 | 5,000,000 | 5,000,000 | 2,321,528 | 46% |
| 2401 – பயிற்சியளித்தல் மற்றும் இயலுமை மேம்பாடு | 308,000 | 600,000 | 693,000 | 679,894 | 98% |
| மூலதனச் செலவின மொத்தம் | **2,655,468** | **5,850,000** | **6,044,000** | **3,340,178** | **55%** |
| முழு மொத்தம் | **57,046,617** | **65,875,000** | **65,875,000** | **59,660,338** | **91%** |

## நிதிப் போக்குகள்

ஒருங்கிணைந்த நிதியின் ஊடாக உள்நாட்டு நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியினை செலவு செய்யும் போது வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அட்டவணை இல 10)

அட்டவணை இல 10

| விபரம் | 2015 உண்மைச் செலவீனம் ரூபா | 2016 அங்கிகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. | 2016 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. | 2016 உண்மைச் செலவீனம் ரூ. |
|---|---|---|---|---|
| திரண்ட நிதியம் 11 – உள்நாட்டு நிதியம் | 57,046,616.00 | 65,875,000.00 | 65,875,000.00 | 59,660,338.39 |
| மொத்த செலவினம் | **57,046,616.00** | **65,875,000.00** | **65,875,000.00** | **59,660,338.39** |


## வருமானம் மற்றும் செலவினப் பகுப்பாய்வு – 2016

திணைக்களத்தினால் 59 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு 1,370 மில்லியன் ரூபாக்கள் உழைக்கப்பட்டுள்ளது. இது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. (அட்டவணை இல 11). மாதாந்த வருமானம் மற்றும் செலவீன சுருக்கம் பின்வருவன.

அட்டவணை இல 11

| மாதம் | வருமானம் | செலவினம் |
|---|---|---|
| சனவரி | 115,368,345.37 | **4,593,953.14** |
| பெப்னபிரவரி | 80,768,448.15 | 4,411,098.56 |
| மார்ச் | 106,526,814.36 | 4,763,535.43 |
| ஏப்ரல் | 119,322,762.46 | 4,804,437.34 |
| மே | 98,170,125.13 | 4,634,013.02 |
| யூன் | 98,322,458.53 | 4,856,921.30 |
| யூலை | 98,193,819.16 | 4,463,009.45 |
| ஆகஸ்ட் | 137,281,230.76 | 4,496,721.70 |
| செத்தெம்பர் | 125,763,491.81 | 4,923,605.99 |
| ஒக்டோபர் | 134,070,446.44 | 4,763,142.56 |

| | | |
|---|---|---|
| நவம்பர் | 95,155,721.07 | 4,847,103.96 |
| திசம்பர் | 161,903,618.02 | 8,102,795.94 |
| **மொத்தம்** | **1,370,847,281.26** | **59,660,338.39** |





**கடந்த 5 வருடங்களின் போது வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் கிடைக்கப்பெற்ற வருமானம்**

1. **கடந்த 5 வருடங்களின் போது வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை**

அட்டவணை இல 12

| **விபரம்** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** |
|---|---|---|---|---|---|
| மருந்துகள் | 1823 | 2104 | 2500 | 2732 | 2,450 |
| வாகனங்கள் | 1606 | 1288 | 958 | 739 | 797 |
| இரசாயனப் பொருட்கள் | 3767 | 4301 | 4339 | 3844 | 3,684 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் பிற | 3468 | 3406 | 3523 | 4338 | 4,399 |
| பலதரப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி | 934 | 1427 | 2148 | 3274 | 4,168 |





## 2. கடந்த 5 வருட காலத்தில் அனுமதிப்பத்திரத்தின் போது ஈட்டிய வருமானம்

அட்டவணை இல 13

| விபரம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மருந்துகள் | 98,973,707 | 83,036,455 | 124,551,191 | 165,323,691 | 209,568,743.70 |
| வாகனங்கள் | 141,991,581 | 125,202,590 | 159,721,793 | 311,027,758 | 293,250,180.66 |
| இரசாயனப் பொருட்கள் | 220,405,559 | 190,727,940 | 298,927,118 | 248,677,073 | 310,511,640.29 |
| தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் பிற | 39,543,218 | 46,973,837 | 57,901,028 | 262,610,141 | 422,736,764.24 |
| பலதரப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி | 11,757,369 | 12,059,178 | 28,414,399 | 94,895,008 | 122,142,866.85 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கொள்கைகள்** | | | | 6,620,319 | 12,244,795.95 |
| **பிற** | | | | | 392,289.57 |
| **மொத்தம்** | **512,671,434** | **458,000,000** | **669,515,529** | **1,089,153,990** | **1,370,847,281.26** |




## கடந்த 5 வருட காலத்தில் வருமானம் மற்றும் அனுமதிப்பத்திரம் பற்றிய தரவுப் பகுப்பாய்வுகள்

கடந்த 5 வருடத்தின் போது ஒவ்வொரு பிரிவினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை மற்றும் கிடைக்கப் பெற்ற வருமானம் மேல் உள்ள பிரகாரம் சுட்டிக் காட்ட முடியும். அதன் பிரகாரம் சில அலகுகளில் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியொன்று கடந்த வருடத்தில் காணப்படுவதுடன் அனுமதிப்பத்திர வருமானம் அதிகரிப்பொன்றை காட்டவில்லை. இது தொடர்பாக பிரதானமான காரணியாக கடந்த வருடத்தின் போது அமேரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினைக் காண முடியும்.

**1. மருந்துகள் - 1 ஆம் அலகு**

2016 ஆம் ஆண்டில் 2015 ஆம் ஆண்டிலும் பார்க்க வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ஓராளவு வீழ்ச்சியடைந்துள்ள போதும் வருமானம் மிகவும் உயர் மட்டத்திற்கு அதிகரித்துள்ளது. அது தொடர்பாக மேலே குறிப்பிட்ட ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை மற்றும் 2016 ஆம் ஆண்டில் மருந்துகள் தொடர்பாக உயர் கேள்வி இருக்கும் என நினைத்த இறக்குமதியாளர்கள் பெறுமளவில் குழு அனுமதிப்பத்திரங்கள் (Bulk Licenses) பாரிய அளவில் பெற்றுக்கொண்டமை காரணமாக இருக்க முடியும்.

**2. வாகனங்கள் - 2 ஆம் அலகு**

2015 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் இறக்குமதி தொடர்பாக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கையை விட 2016 ஆம் ஆண்டில் சிறிதளவு அதிகரிப்பும் காணப்படுகிறமை அவதானிக்க கூடியதாக உள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கடந்த இரண்டு வருடங்களிலும் அனுமதிப்பத்திர வருமானம் உயர் மட்டத்தில் காணப்படுகிறது. இது தொடர்பாக 2015 யூன் மாதம் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமான பத்திரிகை இல 1919-49 இன் ஊடாக அனுமதிப்பத்திர வருமானத்தை திருத்தம் செய்தலும் அந்த வர்த்தமானிப் பத்திரிகை 2016 பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி மீள் திருத்தம் செய்யப்பட்டமையும் காரணமாக உள்ளது.

**3. இரசாயனப் பொருட்கள் - அலகு 3**

2014 ஆம் ஆண்டு இரசாயனப் பொருட்களின் இறக்குமதி தொடர்பாக அதிகமான அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் அதன் ஊடாக அதிகமான வருமானமும் உழைக்கப்பட்ட வருடமாக அறிக்கையிடப்பட்ட போதும், 2015 அந்த அனுமதிப் பத்திர எண்ணிக்கை போன்று, வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திர எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த போதும் வருமானம் அதிகரித்துள்ளது. இதற்கு மேற்கூறப்பட்ட ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை காரணமாகும். இரசாயனப் பொருட்களில் மசகு எண்ணை பிரதானமாவதுடன் அது நாட்டின் உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றது. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார்தின் உற்பத்திப் பிரிவில் குறைவான ஈர்ப்பொன்று காட்டப்பட்டுள்ளமை இரசாயனப் பொருட்களின் இறக்குமதி தொடர்பில் தாக்கம் செலுதியுள்ளது.

## 4. தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் வேறு – 4 ஆம் அலகு

தொலைத்தொடர்புப் பாகங்கள் பற்றி கவனம் செலுத்தும் போது வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றுமல்லாது, அதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்திலும் துரிதமான வளர்ச்சியொன்று காட்டப்பட்டுள்ளன. தொலைத்தொடர்பு உபகரண பாகங்களின் இறக்குமதியின் கையடக்க தொலைபேசி இறக்குமதிக்கு முன்னுரிமை கிடைக்கப் பெற்றுள்ளது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தொலைத்தொடர்புத் துறையின் அறிக்கையிடப்பட்ட அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளதுடன், அந்த 2 வருடங்களின் போது பாரிய செயற்திட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டுள்ளன. தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் கையடக்க தொலைபேசி போன்ற இறக்குமதிகள் 2016 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

## 5. பலத்தரப்பட்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் - 5 ஆம் அலகு

பலத்தரப்பட்ட நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான தொலைத்தொடர்பு உபகரண இறக்குமதி அதிகரித்துள்ளமையின் காரணமாக அலகு 5 இன் மூலம் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகரித்துள்ளதுடன் வருமானமும் கடந்த வருடங்களில் உயர் அதிகரிப்பொன்றை காட்டியுள்ளது.

## 6. கொள்கைள் பிரிவு

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குச் சொந்தமான பணிகளில் நீதியியல் பின்னணியை பாதுகாத்து உரிய ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டும், திருத்தம் செய்யப்பட்டும் தற்பொழுது விதிக்கப்பட்டுள்ள மற்றும் விதிப்பதற்கு உத்தேசித்துள்ள ஒழுங்குவிதிகள் பற்றிய ஆய்வொன்று செய்து பணியாற்றுகின்ற பிரிவாகும்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன்னோடி பிரிவொன்றாக இருக்கின்ற கொள்கைகள் பிரிவின் முக்கியமான பணியாக இருப்பது அரசாங்கத்தின் தேவையின் படி விதிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளை உருவாக்கி அதிவிசேட வர்த்தமானி ஊடாக வெளியீடு செய்வதும் அவற்றை நடைமுறைப்படுத்துதல்.

இதற்கு மேலதிகமாக, ஒழுங்குவிதிகளை உரிய வர்த்தக வங்கிகளுக்கு மற்றும் சுங்கத் திணைக்களத்திற்கு சிபாரிசுகளை வழங்குவதன் மூலம் இறக்குமதி, ஏற்றுமதிச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் முகங்கொடுக்கின்ற பலதரப்பட்ட பிரச்சினைகளை தீர்த்தல்.

நிறுவன கொள்கை வேலைச்சட்டக செயற்பாட்டுத் திட்டங்கள், முன்னேற்ற அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் என்பவற்றை உரிய காலத்தினுள் இந்தப் பிரிவின் ஊடாக தயார் செய்து வெளியிடல்

1917-24 ஆம் இலக்க மற்றும் 2015.06.03 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரத்திற்கு ஏற்ப கொள்கைகள் பிரிவினால் கொள்கை ரீதியான அனுமதியை வழங்குவதற்கு கட்டணம் அறவிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் கொள்கைகள் பிரிவு அனுமதிகளை வழங்குவதன் ஊடாக பெற்ற வருமானம் 12.2 மில்லியன் ரூபாவாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## நிறுவன கட்டமைப்பு

